**ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி**

**மாநிலத் திட்ட இயக்குநரின் செயல்முறைகள்**

**ந.க.2665/C1/பநேப/ஒபக/2022 நாள் :18.02.2023**

**பொருள் :** ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி - அரசுப் பள்ளிகளில் பணியாற்றும் தற்காலிக பகுதி நேரப் பயிற்றுநர்களில் இரண்டாம் கட்டமாக பகுதி நேர தொழிற்கல்வி பயிற்றுநர்களுக்கு (Work Education) பொது மாறுதல் கலந்தாய்வு நடத்துதல்-EMIS இணைய தளத்தில் விண்ணப்பங்கள் பதிவேற்றம் செய்திட அறிவுறுத்துதல் – சார்ந்து.

**பார்வை :**

1. அரசாணை நிலை எண்.177, பள்ளிக் கல்வி சி2 துறை நாள்.11.11.2011.
2. அரசாணை நிலை எண்.186 (SSA) பள்ளிக் கல்வி, அனைவருக்கும் கல்வி இயக்கம் துறை நாள்:18.11.2014
3. சென்னை-6, ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, மாநில திட்ட இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண். 1738/துறை நாள்:26.092018.
4. அரசாணை நிலை எண். 15 பள்ளிக்கல்வித் (அகஇ2) துறை நாள்: 01.02.2021.
5. அரசாணை நிலை எண்.20 பள்ளிக் கல்வித்(அகஇ2) துறை நாள் 02.02.2021
6. அரசாணை நிலை எண்.176, பள்ளிக் கல்வி SE5(1) துறை நாள்.17.12.2021.
7. சங்கங்களிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கை மனுக்கள்,
8. தமிழக அரசின் செய்தி குறிப்பு வெளியீட்டு எண்.1565 நாள்:10.09.2022.

.........

**பார்வை 8-ல் காணும் 10.09.2022 அன்று வெளியிடப்பட்ட தமிழக அரசின் செய்தி குறிப்பின்படி பகுதி நேரப் பயிற்றுநர்களுக்கு விருப்பத்திற்கேற்ப இணைய வழியில் ஒளிவு மறைவற்ற இடமாறுதல் கலந்தாய்வு நடத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது.**

இந்த அறிவிப்பின்படி 2022-23 ஆம் ஆண்டிற்கான தொழிற்கல்வி (Work Education) பகுதி நேர கணினி, இசை, தையல், வாழ்வியல், கட்டிடக்கலை மற்றும் தோட்டக்கலை பயிற்றுநர்களின் கலந்தாய்வு இரண்டாவது கட்டமாக நடத்தப்படவுள்ளது.

**பகுதி நேரப் பயிற்றுநர்கள் பணிமாறுதல் கலந்தாய்வின் போது கீழ்க்கண்ட நெறிமுறைகளை கடைபிடித்தல் வேண்டும்.**

1. மேற்குறிப்பிட்ட பகுதி நேரப் பயிற்றுநர்களுக்கு இரண்டாம் கட்டமாக கலந்தாய்வு 15.03.2023 அன்று முதல் நடைபெறும்.

2. அந்தந்த மாவட்டத்திற்குள்ளாகவும், அதனைத் தொடர்ந்து மாவட்டம் விட்டு மாவட்டத்திற்கான மாறுதல் கலந்தாய்வு நடத்தப்படவேண்டும்.

3. மாறுதல் பெறும் பகுதி நேரப் பயிற்றுநர்கள் பணியிலிருந்து உடன் விடுவிக்கப்பட்டு புதிய பள்ளியில் சேர வேண்டும். மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பாளர் அதன் தொகுப்பறிக்கையினை மாநில திட்ட இயக்ககத்திற்கு அனுப்ப வேண்டும்.

4. பகுதி நேரப் பயிற்றுநர்களின் விருப்பத்தின் பேரில் மாறுதல் ஆணை பெறுவதால் இவ்வாணையை ரத்து செய்யவோ அல்லது மாற்றம் செய்யவோ கோரும் கோரிக்கைகள் பரிசீலிக்க இயலாது.

5. இம்மாறுதல் பெறும் பகுதி நேரப் பயிற்றுநர்கள் விருப்பத்தின்மேல் மேற்கொள்ளப்படுவதால் மாறுதல் பயணப்படிகள் வழங்கப்படமாட்டாது.

6. மாறுதல் கோரும் பகுதி நேரப் பயிற்றுநர்கள், விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து சார்ந்த தலைமையாசிரியரால் **28.02.2023-க்குள்** EMIS இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும். பதிவு செய்தபிறகு EMIS இணையதளத்திலிருந்து பெறப்படும் ஒப்புதல் நகலை தங்கள் வசம் வைத்துக்கொள்ள வேண்டும். ஒரு நகலைத் தலைமையாசிரியர் சார்ந்த மாவட்டத் திட்ட அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

7. மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலகத்தில் நேர்முக உதவியாளர்கள் மற்றும் APO ஆகியோர் உள்ளடக்கிய குழு, முதன்மைக் கல்வி அலுவலர் தலைமையில் இவ்விண்ணப்பங்கள் அனைத்தும் EMIS இணையதளத்தில் முறையாக பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதா என்பதை **01.03.2023 பிற்பகல் 5.30 மணிக்குள்** உறுதி செய்ய வேண்டும். APO பகுதி நேரப் பயிற்றுநர்களின் மாறுதல் விண்ணப்பங்களை முறையாக பதிவேட்டில் பதிவு செய்து வைத்திருக்க வேண்டும்.

8. பகுதி நேரப் பயிற்றுநர்களின் தரவுகள் EMIS இணைய தளத்தில் சரியாக உள்ளதா என்பதை முதன்மைக் கல்வி அலுவலர் உறுதி செய்திடல் வேண்டும்.

9. மேலும், மாறுதல் கலந்தாய்வு நடத்தப்படும் நாளில், இதே குழு மாநிலத் திட்ட இயக்ககத்திலிருந்து அனுப்பும் சுற்றறிக்கையின் அடிப்படையில், முதன்மைக் கல்வி அலுவலரின் தலைமையில் எவ்வித புகாருக்கும் இடமளிக்காமல் கலந்தாய்வினை நடத்திட வேண்டும்.

10. ஒரே பணியிடத்திற்கு ஒன்றுக்கு மேற்பட்ட பகுதி நேரப் பயிற்றுநர்கள் பணி மாறுதல் கோரினால் கீழ்க் குறித்த தரவுகள் அடிப்படையில் முன்னுரிமை வழங்க வேண்டும்

## I. முன்னுரிமை:

1. "முற்றிலும் கண் பார்வையற்றவர்",
2. "மாற்றுத்திறனாளிகள் (40 சதவீதம் மற்றும் அதற்கு மேல் உள்ளவர்கள்)
3. "மனவளர்ச்சி குன்றிய/ மாற்றுத்திறனாளி குழந்தைகளின் பெற்றோர்"
4. "சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை / டையாலிசிஸ் சிகிச்சை / இருதய அறுவை சிகிச்சை / புற்று நோயாளிகள் / மூளை கட்டி நோயால் பாதிக்கப்பட்டோர்.
5. இராணுவத்தில் பணிபுரியும் துணைவர் உடையவர்கள்.
6. கணவர் / மனைவியை இழந்தவர்"
7. கணவன் / மனைவி பணிபுரியும் இடத்திலிருந்து 30 கிலோ மீட்டர் அப்பால் பணிபுரிபவர்கள் (/அரசு/ அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் மாநில அரசு /ஒன்றிய அரசு/பொதுத்துறை நிறுவனம் ஆகிய அலுவலகங்களில் பணிபுரியும் கணவன்/மனைவி தகுந்த சான்றிதழ் பெற்று இணைத்தல் வேண்டும்)

## II. பகுதி நேரப் பயிற்றுநராக பணியில் சேர்ந்த நாள்:

## III. பிறந்த நாள் :

**(முன்னுரிமை கோரும் விவரங்கள் தவறு எனக்கண்டறியப்பட்டால் மாறுதல் ஆணை ரத்து செய்யப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்).**

<u>இணைப்பு</u>: பகுதி நேரப் பயிற்றுநர்களின் பணிமாறுதல் விண்ணப்பப் படிவம் (EMIS தளத்தில்)

18/12/23

**மாநிலத் திட்ட இயக்குநருக்காக**

18/12/23

## பகுதி நேரப் பயிற்றுநர்கள்

## விருப்பமாறுதல் கோரும் விண்ணப்பப் படிவம் - 2023-2024

## (மாவட்டத்திற்குள் / மாவட்டம் விட்டு மாவட்டம்)

| வ. எண். | பொருள் | | |
|---|---|---|---|
| 1. | பகுதி நேரப் பயிற்றுநர் பெயர் | : | |
| | i) பாலினம் | : | |
| | ii) கைபேசி எண். | : | |
| | iii) பிறந்த நாள் | : | |
| 2. | பாடம் (தொழிற் கல்வி) | : | |
| 3. | பகுதி நேரப் பயிற்றுநராக பணியில் சேர்ந்த நாள். | : | |
| 4. | தற்போது பணியாற்றும் விவரம் | : | |
| | i) பள்ளியின் பெயர் | : | |
| | ii) தற்போதைய பள்ளியில் பணியில் சேர்ந்த நாள் | : | |
| | iii) ஒன்றியம் | : | |
| | iv) மாவட்டம் | : | |
| | v) 6 முதல் 8 வரை உள்ள வகுப்புகளில் மாணவர்களின் எண்ணிக்கை விவரம். (தலைமை ஆசிரியரால் நிரப்பப்பட வேண்டும்) | : | |
| 5 | மாறுதல் கோரும் விவரம் | : | |
| | மாவட்டத்தின் பெயர் | : | |
| | ஒன்றியத்தின் பெயர் | : | |
| 6 | மாறுதல் கோருவதற்கான காரணம் | : | |
| 7 | நிரந்தர வீட்டு முகவரி | : | |
| 8. | முன்னுரிமை அடிப்படையில் மாறுதல் கோரினால் அதன் விவரம் (உரிய சான்றிதழ்கள் இணைக்கப்பட வேண்டும். | : | |

மேற்காண் விவரங்கள் அனைத்தும் சரியாக உள்ளது என உறுதி அளிக்கிறேன்.

பகுதி நேரப் பயிற்றுநரின் கையொப்பம்

படிவத்திலுள்ள விவரங்கள் அனைத்தும் சரியாக உள்ளது என சான்றளிக்கப்படுகிறது.

தலைமையாசிரியர் கையொப்பம்　　　　　　　　மாவட்ட உதவித் திட்ட அலுவலர்